**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**STC.NO- 155/2024**
**Dated :13.05.2026**
**Deposition of witness for : D.W.2**

**Chief Examination of DW2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அப்துல் ரகுமான் | வயது | : | 30 |
| தந்தை பெயர் | : | சையது அலி | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | கிளை உதவிமேலாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card. Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)
**முதல் விசாரணை**

நான் தற்போது சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கந்தர்வகோட்டை கிளையில் உதவி மேலளாராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் வங்கியில் வழக்கின் புகார்தாரர் சிவக்குமார் என்பவருக்கு வங்கி கணக்கு எண் 3254347577 என்ற வங்கி கணக்கு உள்ளது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை அவரது வங்கி கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு 12.02.2024 ஆம் தேதி Exceeds Arrangement என்ற காரணம் கூறி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான, வங்கி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்கிறேன். **(மேற்படி வங்கி கணக்கு அறிக்கையின் உண்மை நகல் சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** காசோலையில் பிழைதிருத்தம் இருந்தால், எங்கள் வங்கியில் காசோலை அந்த காரணத்தை குறிப்பிட்டு திருப்பி அனுப்பப்படும் என்றால் சரிதான். பிழை திருத்தம் இருந்தால் காசோலையை வசூலுக்கு அனுப்பி வைக்க மாட்டோம் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 வழக்கு காசோலையில் பிழை திருத்தம் உள்ளது என்றால் Lakshs என்று எழுத்து பிழையுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த காரணத்தினால் எங்கள் வங்கியில் காசோலை திருப்பப்படவில்லை என்றால் சரிதான்.

மேற்படி காசோலையில் இரண்டு நபர்களின் பெயர் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஒரு நபரின் கையொப்பம் தான் காசோலையில் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக நாமினியாக நியமிக்கப்பட்ட நபர் வங்கி கணக்கில் பரிவர்த்தனை செய்ய முடியாது என்றால் சரிதான். ஒரு வங்கி கணக்கில், நாமினியாக உள்ள நபர் அந்த வங்கி கணக்கில் காசோலை எழுதி கொடுக்க முடியாது என்றால்

சரிதான். வழக்கு காசோலையில் எண்ணால் குறிப்பிடப்பட்டுள்ள தொகையில் ரூ.5,00,000 என்பதற்கு பிறகு (/-) என்ற குறியீடு எழுதப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையில் எழுதப்பட்ட விவரத்தின் பேனா மையும் கையொப்பமிட்ட பேனா மையும் வேறு வேறாக உள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.5 அறிக்கையில் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.05.13 16:44:58 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**